பக்கங்கள் 23 + 3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 30 செவ்வாய்க்கிழமை 14.01.2025 அதிர்வு 166

## பதுளையில் ரயிலில் மோதி பாடசாலை காவலாளி பலி!

பதுளை ரயில் நிலையத்துக்கு அருகில் கண்டியில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த அதிவேக விசேட ரயிலில் மோதுண்டு பாடசாலை காவலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# அநுரவுக்கு சீனாவில் அமோக வரவேற்பு!

## பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடத் திட்டம்

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இன்று சீன நேரப்படி காலை 10.25 மணியளவில் சீனாவின் பீஜிங் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு, சீனப் பிரதி வெளியுறவு 02



## சஜித் பங்கேற்ற தைப்பொங்கல் கொண்டாட்டம்

தமிழ் மக்களால் மிகுந்த பக்தியுடனும், உற்சவத்துடனும் கொண்டாடும் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று பொங்கல் தினக் கொண்டாட்ட நிகழ்வு கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் வஜிரா பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# சஜித் பங்கேற்ற தைப்பொங்கல் கொண்டாட்டம்










## அநுரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சென் சியாடொன் வரவேற்றதோடு சீன இராணுவத்தின் முழு இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பயணித்த பாதையின் இருமருங்கும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும் பல உயர் மட்ட வணிகக் கூட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ளன.

வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹொன்ங், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.

## பதுளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு இடம்பெற்றுள்ளது என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை ஊவா உயர்தரப் பாடசாலையில் பாடசாலைக் காவலாளியாகக் கடமையாற்றிய பதுளை, தியான்நெவெல பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் மசார்ஹிர் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பதுளை ரயில் நிலையத்தில் இருந்து வெகுதொலைவில் உள்ள அமுனுவெல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள ரயில் நிலையத்துக்கு அருகில் அவர் பயணித்துக் கொண்டிருந்தபோது கண்டியில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த விசேட அதிவேக ரயில் மோதி மேற்படி நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.





# இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகள்

**(கி.வசந்தன்)**

உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் இன்று இடம்பெற்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கு இணங்க தமிழ் மக்கள் தமது சூரியக் கடவுள்ளுக்கு நன்றி தெரிவித்து தைப்பொங்கலைக் கொண்டாடி வருகின்றனர்.

அதற்கிணங்க, வவுனியாவின் பிரதான ஆலயங்களில் ஒன்றாகிய கந்தசாமி ஆலயத்தில் புதுப் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் இடம்பெற்றதுடன், ஆலயப் பிரதம குரு தலைமையில் விசேட அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

இதன்போது, பக்த அடியார்கள் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பொங்கல் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

இதேபோல் ஏனைய இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
















# வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்களுடன் தைப்பொங்கல் திருநாள்

**(கி.வசந்தன்)**

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்கள் இசைக்க மழைக்கு மத்தியிலும் தைப்பொங்கல் திருநாள் சிறப்பாக இன்று கொண்டாடப்பட்டது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்பு குழுவினரின் பங்களிப்புடன் சிறப்பான முறையில் புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல் இடம்பெற்றது.

இந்தப் பொங்கல் நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ன, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்த சமுதாயப் பொலிஸ் பிரிவின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.














# அமெரிக்க நிர்வாகம் அழைத்தால் வொஷிங்டனுக்குச் சென்று எமது பிரச்சினையை எடுத்துரைப்போம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

“அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராகவுள்ளோம்.”

– இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான இன்று (14.01) கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தின் பின் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்,

“இன்று தைப்பொங்கல். இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நாள். விவசாயத்துக்கு இன்றியமையாத சூரிய ஒளியை வழங்கிய சூரியனுக்கு சூரியக் கடவுள்) நமது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இந்த நாளை நாங்கள் கொண்டாடுகின்றோம். டிரம்பை வாழ்த்துகின்றோம். நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களைப் பெருக்குகின்றோம்.

அறுவடையில் முக்கிய பங்காற்றிய மழை, கால்நடைகள் மற்றும் பூமிக்கு விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றனர். இந்த இனிய தருணத்தில் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தாய்மார்கள் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

தமிழர்களுக்கு இந்த மகத்தான நாளில், 2025 ஆங்கில புத்தாண்டையும்வரவேற்கின்றோம். எவ்வாறாயினும், இந்த நாள் ஒரு சோகமான மைல் கல்லையும் குறிக்கின்றது.

தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை மீண்டும் பெறும் வரை இடைவிடாத போராட்டத்தின் 2886 ஆம் நாள் இன்று. வவுனியா நீதிமன்றத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நிற்கும் இந்த தைரியமான தாய்மார்கள் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக்கையைத் தொடர்ந்தும் முன் வைக்கின்றனர். தங்களின் அன்புக்குரியவர்களை வெளிக்கொணர்வதும், எதிர்கால இனப் படுகொலைகளைத் தடுப்பதும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதும் தாய்மாரின் நோக்கம்.

நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்ற அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்பை வாழ்த்துகின்றோம். ‘அவன் இல்லாமல் ஒரு அணுவும் அசையாது’ என்பது தமிழ்ப் பழமொழி. அதேபோல், அமெரிக்கா மற்றும் அதன் ஜனாதிபதியின் தலைமை இல்லாமல், உலகம் அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ நகர முடியாது.

மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சுதந்திர உலகின் தலைவர் டொனால்ட் டிரம்ப். அவரது வரவிருக்கும் காலத்தில், அமெரிக்காவின் தீர்க்கமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத் தக்க மாற்றங்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். உதாரணமாக பனாமா கால்வாய், கிரீன்லாந்து மற்றும் கனடா தொடர்பான டிரம்பின் கடந்த மாத அறிக்கைகள், அவரது கவனம் இலங்கை உட்பட தெற்காசியாவை நோக்கி விரைவில் திரும்பக்கூடும் என்று நம்மை சிந்திக்க வைக்கின்றது.

உலகில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்ததுக்கு எதிரான தனது நிலைப்பாட்டில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. சீனாவுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்த இடங்களில், அரசியல் அல்லது கட்டமைப்பு மாற்றங்கள் பின்பற்றப்படலாம்.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர்களாகிய நாம் வரவேற்கின்றோம். அவரது நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராகவுள்ளோம்.” – என்றார்.













இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் தமது பிள்ளைகளின் படங்களையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் தாங்கியவாறு கண்ணீர்மல்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# திமிர்த்தனப் பதில்!

இலங்கையில் மாறி மாறி ஆட்சி பீடத்துக்கு வரும் பௌத்த - சிங்களப் பேரினவாத தலைமைத்துவங்களின் அடிப்படைப் பண்பியல்பு பெரும்பாலும் மாறுவதில்லை. ஒற்றைப் போக்கில்தான் அது இருக்கும்.

ஆட்சியாளர்கள் மாறுவார்கள். ஆட்சியைக் கையாளும் தரப்புக்களும் மாறும். ஆனாலும் அவற்றின் பௌத்த - சிங்களப் பேரினவாத மனவமைப்பும் சிந்தனைப் போக்கும் செயற்பாடுகளும் மாறுவதில்லை. அவை பெரும்பாலும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்தை முழு அளவில் பிரதிபலிப்பாகவே இருக்கும்.

இப்போது புதிதாக ஆட்சி பீடம் ஏறி இருக்கும் தேசிய மக்கள் சக்தி கூட அதற்கு விதிவிலக்கல்ல. வெளியில் இடதுசாரிகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டாலும் - அவர்களை இனவாதிகள் அல்லர் என்ற போக்கில் தமிழ் தரப்புகளில் விடயம் புரியாத வாக்காளர்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ள போதிலும் - ஆட்சியாளர்கள் பௌத்த,சிங்கள பேரினவாத மனவமைப்பிலிருந்து மாறுவதில்லை என்பதுதான் நிலையான உண்மை.

அந்த வகையில் தான் நாடாளவிய சிறைகளில் 'அரசியல் கைதிகள்' யாரும் தடுத்து வைக்கப்படவில்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார கூறிய கருத்தை நோக்க வேண்டியுள்ளது.

நீண்ட காலமாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களிடத்தில் கையெழுத்துக்களைச் சேகரித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமும், சட்டமா அதிபரிடமும் கையளிக்கும் முகமாக போராளிகள் நலன் புரிச்சங்கத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது என்பது தொடர்பில் வினவியபோதே நாடாளவிய சிறைகளில் 'அரசியல் கைதிகள்' என யாரும் தடுத்து வைக்கப்படவில்லை அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

''நாட்டில் உள்ள எந்தவொரு சிறையிலும் அரசியல் கைதி என்றொருவரும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளார்கள்.'' - என்று அவர் கூறியுள்ளார்.

இது ஒன்றும் புதிய விடயமோ, புதிய பதிலோ அல்ல. முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் எல்லோரும் காலத்துக்கு காலம் கூறி வந்த பதில்தான். அதற்கு தேசிய மக்கள் சக்தி அரசும் விதிவிலக்கு அல்ல என்பதுதான் இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை - உரிமைக்கான அவர்களின் விடுதலை வேள்வியை - அரசியல் போராட்டமாக கருதாமல் பயங்கரவாதமாகவே கருதும் பண்பியல்பு தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மேலாண்மை மன ஆதிக்கத்தில் இருந்து வந்தது என்பதை வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தும் பதில்தான் இது.

இந்தப் பண்பியல்பில் இடதுசாரிகள் என்ன, வலதுசாரிகள் என்ன, யாரும் வேற்றுமை இல்லாதவர்கள் என்பது தான் தென்னிலங்கை நிலைமை என்பதை இலங்கைச் சிறைகளில் 'அரசியல் கைதிகள்' என்று யாரும் இல்லை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவோரும் தண்டிக்கப்பட்டோரும்தான் உள்ளனர் என்ற ஆளுந் தரப்பினது இந்தத் திமிர்த்தனப் பேச்சும் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வளவே.





# 18 மாதங்களில் 2000 பேருக்கு இலவசமாக இருதய சிகிச்சை!

## சத்திரசிக்சைக் கூடமும் திறந்து வைப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு கிரான்குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சஞ்சீவனி வைத்தியசாலை கடந்த 18 மாதங்களில் 2000 பேருக்கு இருதய சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக செய்துள்ளது. அதேவேளை தற்போது இலவச இருதய மாற்று சத்திரசிக்சைக் கூடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரியதொரு வரப் பிரசாதமாகும்.

இவ் வைத்தியசாலை கடந்த வருடம் ஜூன் மாதம் தனது சேவையை ஆரம்பித்தது . 18 மாதங்கள் கடந்த நிலையில் 2000 நோயாளர்களுக்கு இலவச இருதய சிகிச்சைகளை மட்டக்களப்பு போதான வைத்தியசாலை இருதய மருத்துவப் பிரிவுடனும் கல்முனை ஆதார வைத்தியசாலையுடனும் இணைந்து செய்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாக இருதய மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான சத்திரசிகிச்சைக் கூடம் மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு என்பன கடந்த 04 ஆம் திகதி இந்த வைத்தியசாலையின் நிறுவுனர் சற்குரு.



மதுசூதனன் சாயால் திறந்து வைக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் கிரிக்கட் ஜாம்பவான்களான அரவிந்தடி சில்வா, முத்தையா முரளிதரன், சமிந்தவாஸ, அஜந்த மெண்டிஸ் மற்றும் வைத்தியசாலையின் இலங்கை தலைமை அதிகாரி பென்னி ஜெயவர்த்தன, வைத்தியசாலை பணிப்பாளர் ரமேஸ் ராவ் இவ்வைத்தியசாலையின் பொது முகாமையாளர் டேவிட் சில்வஸ்டர் மற்றும் இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர்களான டீபால் விக்ரமசிங்க, சுதர்சனம் தர்மரெட்ணம், நிசாந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் இரா. முரளீஸ்வரன், மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் கு. சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் க.கலாரஞ்சினி மற்றும் இருதய வைத்திய நிபுணர்களான மருத்துவர் வினோதன் மற்றும் மருத்துவர் ரஜீவன் பிரான்சிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# போதை மாத்திரைகளுடன் இருவர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கைது!

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (13) இந்த இளைஞர்கள் கைது செய்ப்பட்டனர். இவர்களிடம் இருந்து 200 போதை மாத்திரைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 24 வயதான இரு இளைஞர்களே கிளிநொச்சியில் இருந்து பஸ்ஸில் சாவகச்சேரி வந்து போதை மாத்திரைகளை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த இரு இளைஞர்களையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் அவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என பரிசோதனை முடிவுகள் தெரிவித்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# தோப்பூர் பிராந்திய மருத்துவமனையின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஆளுநர்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர நேற்று (13) மூதூர் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள தோப்பூர் பிராந்திய மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அங்கு குறித்த மருத்துவமனையின் பிரச்சினைகள் குறித்து மருத்துவமனை ஊழியர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.



# சிவனொளிபாத மலை கழிவு முகாமை திட்டம் தொடர்பில் விசேட கள ஆய்வு!

(மஸ்கெலியா)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலகம் மற்றும் நுவரெலியா மாவட்ட அலுவலக அதிகாரிகள் இணைந்து சிவனொளிபாத மலை கழிவு முகாமைத்துவ திட்டம் தொடர்பில் விசேட கள ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிவனடி பாத மலைக்கு செல்லும் வீதியில் உள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றதா என அதிகாரிகள் சிறப்பு ஆய்வு நடத்தினர்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன், சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் திண்ம கழிவுகள் மற்றும் அவற்றை முறையாக அகற்றுவது குறித்து சிவனொளிபாத மலைக்கு செல்லும் வீதியில் உள்ள வர்த்தககர்களுக்கு தெரியப்படுத்தவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் நுவரெலியா மாவட்ட அலுவலகம் ஆகிய வற்றின் அதிகாரிகள் குழுவொன்று இந்தக் களபயணம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கெடுத்தது.









# கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பார்வையிட்ட ஆளுநர்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர நேற்று (13) திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண சபைக்குச்சொந்தமான வாகனங்கள் மற்றும் பழுதடைந்த வாகனங்களை கண்காணிப்பு செய்யும் நோக்கில் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சொந்தமான வாகனங்களை பழுது பார்த்துப் பயன்படுத்தக் கூடிய வாகனங்களைப் பழுது பார்த்துப் பயன்படுத்த உரிய அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் கருத்துரைத்த ஆளுநர் இது எல்லாம் அரச பணம். இதனை மீள திருத்தி பயன்படுத்த முடியுமாக இருந்தால் பயன்படுத்த வேண்டும் என்றார்.



### 100 மில்லியன் ரூபா செலவில்

# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய வளாகத்தில் வேலைத்திட்டம்

(நவாஸ்)

தென் கிழக்கு பல்கலைக்கழக மல்வத்தை விவசாய தொழிநுட்ப வளாகத்தில் 100 மில்லியன் ரூபா செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் வேலைத்திட்டம் பல்கலைக்கழக உபவேந்தர் அப்துல் மஜீத் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது குறித்து வேலை முன்னேற்ற நிலமைகளை கண்காணிக்க உபவேந்தர் தலைமையிலான குழு அண்மையில் மல்வத்தைக்கு நேரடி விஜயம் செய்தது.

இதன்போது பல்கலைக்கழக உபவேந்தர் குறித்த வேலைத்திட்டத்தை துரிதகதியில் நிறைவு செய்யுமாறு ஒப்பந்தகாரர்கள் மற்றும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

குறித்த கள விஜயத்தில் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட விரிவுரையாளர் கலநிதி.ஏ.என். எம் முபாறக், கலநிதி எ.டி.என்.கே. குமார மற்றும் வேலைத்தள



பெறியலாளர் எந்திரி எம். எஸ். எம். பசீல் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு உத்தியேகத்தர்கள், பல்கலைக்கழக வேலைதள அத்தியேகட்சர்கர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்குப் பயிற்சி வசதி மற்றும் கற்றல் வசதிகளை ஏற்படுத்தும் வகையில் கட்டுமான பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட விரோதமாக இயங்கி வந்துள்ள சாராயம் விற்பனை நிலையங்கள்!

## மதுவரித் திணைக்களத்தினரால் முற்றுகை

(த.சுபேசன்)

பருத்தித்துறைப் பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமாக இயங்கி வந்த மூன்று சாராயம் மற்றும் பியர் விற்பனை நிலையங்கள் நேற்று (13) திங்கட்கிழமை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் முற்றுகையிடப்பட்டுள்ளன.

மாகாண உதவி மதுவரி ஆணையாளர் எஸ்.ரஞ்சனின் ஆலோசனைக்கு அமைவாக, யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் ரணவீரவின் அறிவுறுத்தலில், பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரசிகரன் தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை, கரணவாய் பகுதிகளில் மூன்று வெவ்வேறு இடங்களில் மேற்படி முற்றுகை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராயம் மற்றும் பியர் ஆகியன மீட்கப்பட்டன. சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.







# விவசாயிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இலுப்பைக்கடவையில் அறுவடை விழா

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பரங்கிகமம் பகுதியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் உணவுப் பண்பாட்டியல் தொடக்க விழா வான அறுவடை விழா நடைபெற்றது.

இலுப்பை கடவை கமக்கார அமைப்பின் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர். க. கனகேஸ்வரன் கலந்து கொண்டு தமிழர் பாரம்பரிய பண்பாட்டு முறைப்படி முதல் அறுவடையைத் தொடங்கி வைத்தார்.

இதன் போது அருட்தந்தை ஜெய பாலன் குரூஸ் அடிகளார், மன்னார் மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் அன்ரனி மரின் குமார், மாவட்ட விவசாய பணிப்பாளர் அ.சகிலா பானு மற்றும் அழைக்கப்பட்ட திணைக் களத் தலைவர்கள், விவசாய அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கமக்கார அமைப்பின் உறுப்பினர்களால் பொங்கல் வைத்துக் கொண்டாடப்பட்டது. கடந்த காலத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் நிமித்தம் விவசாயிகள் முற்றாக பாதிக்கப்பட்ட போதிலும் இந்தப் பகுதியில் நெல் விளைச்சல் வெற்றி யளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால்  மக்களுக்குப் பசு வழங்கல்!

**(பழுவூரான்)**

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால் சனிக்கிழமை (11) மிகவும் வசதி குறைந்த குடும்பங்களுக்கு ஒரு பசு வழங்கும் வேலைத் திட்டத்துக்கு அமைவாக மூன்றாம் கட்டமாக  மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தலா இரண்டு (02) பேர் வீதம் பிரதேச செயலாளர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட ஆறு (06) பயனாளிகளுக்கு பசு வழங்கப்பட்டது.

தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தலைவர், வண்ணக்கர், செயலாளர், பொருளாளர், தேச மகாசபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்  கலந்து கொண்டனர்.










# சிறுவர் பராமரிப்பு நிலைய சிறார்களுக்கு உதவிகள்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியா பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஊடாக பாமஸ்டன் ரட்ணகிரிய (லிந்துலை பகுதியிலுள்ள) சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள சிறார்களுக்கு இலவசமாக தண்ணீர் போத்தல்கள், சாப்பாடு பெட்டிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் பொதிகள் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் நகுலேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.







# தைப்பொங்கல் கொண்டாட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா வலப்பனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மந்திரிதென்ன விடுதுகல சிங்கள பாடசாலையில் அதிபர் ஜமுனாகுமாரி தலைமையில் தைப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

முழு பாடசாலை சமூகமும் தமிழ் கலாச்சார உடைகளை அணிந்து தமிழ் கலாச்சாரத்துடன் தைப்பொங்கல் விழாவை கொண்டாடினர்.ஒரு சிங்கள பாடசாலையில் தைப் பொங்கல் விழா இவ்வாறு மிகச்சிறப்பாக நடைபெற்றதை ஒரு முன் மாதிரி யான செயற்பாடாக கருதுவதாக அனைத்து கல்விச் சமூகத்தினரும் பாராட்டுகின்றனர்.



# அரிசி விலையை அதிகரித்து விற்றதால் திருமலை வர்த்தகர் மீது சட்ட நடவடிக்கை

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விசேட சுற்றி வலைப்பை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் (12) திருகோணமலையில் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது திருகோணமலை நகரில் அரிசி விலையை அதிகரித்து விற்பனை செய்த இரு கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு கடையில் சிவப்பு அரிசி 280 ரூபாவாகவும் இன்னொரு கடையில் வெள்ளைப் பச்சை அரிசி 270 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

இதனை உறுதிப்படுத்திய பின்னர் இரு கடைகளுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மஸ்கெலியா நகரில் பிரதான சாலையில் குழிகள் அதிகமானதால் பயணிகள் சிரமம்

(மஸ்கெலியா )

மஸ்கெலியா நகரில் உள்ள அனைத்து ஆலயங்களுக்கும் செல்லும் பிரதான சாலையில் பாரிய அளவில் குன்றும் குழியுமாக உள்ளதால் பாதசாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள், பக்தர்கள் பாடசாலை மாணவர்கள் இந்த வீதியில் செல்லும் நிலையில் இந்த வீதியில் கழிவு நீர் தேங்கி நிற்கிறது.

மழை காலத்தில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள் செல்லும் போது கழிவு நீர் அடிப்பதால் பாடசாலை மாணவர்கள் பயணிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த வீதி வழியாக சமனெலிய சிங்கள பாடசாலை மாணவர்கள் செல்ல வேண்டும். இவ் வீதி மஸ்கெலியா பிரதேச சபைக்கு உரித்தானது.

குறிப்பிட்ட வீதி ஓரமாக அமைந்துள்ள வடிகால் அனைத்தும் குப்பை, மண் நிரப்பி உள்ளதால் கழிவுநீர் தேங்கி நிற்கிறது. ஈக்களது தொல்லை, நுளம்புகள் தொல்லை அதிகம் உள்ளது என்று இந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் பஸ் தரிப்பிடத்தில் உள்ள பொதுவான கழிவறையில் இருந்து நாளாந்தம் வெளியேறும் கழிவுநீர் காரணமாக அப் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரிவோர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர் பெரிதும் பாதிக்கபட்டுள்ளனர். சுகாதார சீர்கேடான முறையில் உள்ள இந்தக் கால்வாய், ஆலயங்களுக்கு செல்லும் பிரதான வீதி மற்றும் அப் பகுதியில் உள்ள கால்வாய் அனைத்தும் செப்பனிட்டு தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# சம்மாந்துறை ஊடக மைய உறுப்பினர்களுக்கு விருது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை ஊடக மைய உறுப்பினர்களுக்கு, அவர்களின் உயரிய பங்களிப்புக்காக டேலன்ட் பிளஸ் டிவியின் கௌரவிப்பு நிகழ்வில் விருதுகள் வழங்கி கௌரவிக்கபட்டது. இந்த நிகழ்வானது சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு மூடேலன்ட் பிளஸ் டிவி கலை கலாசார அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விழாவில் ஊடகத் துறையில் செய்தி வழங்கல், தொகுப்பாளர் பணிகள், கலை நயமான நிகழ்ச்சிகள் மற்றும் சமூக சேவைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கிய சம்மாந்துறை ஊடக மைய உறுப்பினர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.எம். ஹனீபா, 241 படைப்பிரிவின் பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் மேஜர் ஜானக சுப சிங்க, பொலனறுவை மாவட்ட சிரேஸ்ட பொறியாளர் எம்.எஸ். எம். நவாஸ், சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபர், மட்டக்களப்பு சம்மாந்துறை சிலியட் உயர் கல்வி நிறுவனத்தின் பிரதம கணக்காளர் எஸ்.எம்.ஜிப்ரி என பலரும் கலந்து கொண்டனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(எம். எப். றிபாஸ்)

நற்பிட்டிமுனை அல் கரீம் பௌண் டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நற்பிட்டிமுனை பிரதேசத்திலுள்ள சுமார் ஐம்பது மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் தவிசாளரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளருமான சட்டத்தரணி சீ. எம்.ஹலீம் பிரதம அதிதியாகவும் பொதுச் செயலாளர் யூ.எல். எம்.பாயீஸ் விசேட அதிதியாக வும் கலந்து கொண்டனர்.

# நட்புறவு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடப்பார அணி வென்று சம்பினானது!





(றிபாஸ்)

ஒற்றுமை மற்றும் நட்புறவை ஏற்படுத்தும் நோக்கில் களனி பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடப்பார அணி வெற்றி பெற்று சம்பினாக தெரிவு செய்யப்பட்டது.

பல்கலைக்கழக சைபர் மைதானத்தில் மஜ்லிஸின் தலைவர் சராபத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆறு குழுக்களுக்கு இடையில் இந்தச் சுற்றுப் போட்டி இடம்பெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் சிண்டிகேட் அணியும் கடப்பார அணியும் மோதிக் கொண்டதில் கடப்பார அணி வெற்றி பெற்றுள்ளது. சிறந்த துடுப்பாட்ட வீரராக சஹிரியும், சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் பஹிஜியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் புதிய தலைவராக தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம் பைசல் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் தலைமையில் இடம்பெறவுள்ள கற்பிட்டி பிரதேச முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்புடையதாக பிரதேச மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சகல அபிவிருத்திப் பணிகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதும், வழிநடத்துதல் மற்றும் நடவடிக்கைகளைப் பின் தொடர்தல் என்பன பற்றிய பரிந்துரைகளை 16 நண்பகல் 12.30 மணிக்கு முன் சமர்பிக்குமாறு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தெரிவித்துள்ளார்.





# தேசிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைப்பு அலுவலகம் அக்கரைப்பற்றில் திறப்பு

(வடிவேல் டினேஸ் )

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் ஒருங்கிணைப்பு அலுவலகம் நேற்று (13) அக்கரைப்பற்றில் திறந்து வைக் கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கான தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சக்தியின் மக்கள் ஒருங்கிணைப்பு அலுவலகம் அக்கரைப்பற்று 9 ஆம் பிரிவில் நேற்று (13) மாலை திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நாயக்க, மற்றும் அபூபக்கர் ஆதம்பாவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொது மக்கள் உள்ளிட்ட ஆலையடிவேம்பு பிரதேச தேசிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# இறக்காமம் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், இறக்காமம் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஜெசிந்தன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் விடுதிகள் உள்ளிட்ட சில பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்ட பணிப்பாளர் வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டது. அத்தியாவசிய தேவைகளை உடன் நிவர்த்தி செய்து தருவதாகவும் பணிப்பாளர் உறுதியளித்தார்.





# பிரதம பொலிஸ் பரிசோதகரின் ஓய்வை முன்னிட்டுக் கௌரவிப்பு

பொலிஸ் சேவையில் இணைந்து சுமார் 37 வருடங்களாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பணியாற்றி பல பதவியுயர்வுகளையும் பெற்று இறுதியாக கல்முனை பொலிஸ் நிலைய பதில் தலைமை பொலிஸ் பரிசோதகராக பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மீரா லெப்பை றபீக்கை கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (11) மாலை சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்குமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கலாநிதி கே. அஜித் றோஹனவும் கௌரவ அதிதிகளாக அம்பாறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் -1 சேனாரத்னவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் றபீக்கின் சேவையைப் பாராட்டி அதிகாரிகளாலும் பொது மக்களாலும் பொன்னாடை போர்த்தி ஞாபக சின்னங்கள் வழங்கப்பட்டது.

நிகழ்வின்போது பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் றபீக், அவர்களது குடும்ப உறவினர்கள், சாய்ந்தமருது உலமாசபையின் தலைவர், வர்த்தகர்கள் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# வடக்கு சமூக ஆளுகைத் தளத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள்

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு செயற்படும் சமூக ஆளுகைத் தளத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான முதலாவது மாதாந்த ஒன்றுகூடல் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றிருந்தது.

சமூக ஆளுகைத் தளத்தின் தலைவர் திருமதி அனுசியா ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி ஒன்றுகூடலில் சமூக ஆளுகைத் தளத்தால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் 2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் சமூக ஆளுகைத் தளத்தில் அங்கம் வகிக்கும் திருநர் சமூகத்தினர், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் போராளிகள், உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்திய பெண் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமூக ஆளுகைத் தளமானது கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, திருநர் சமூகத்திற்கான அங்கீகாரத்தை ஏற்படுத்தல் மற்றும் விளிம்பு நிலை சமூகத்தினருக்கான சட்ட ஆலோசனைகளை வழங்கல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# குடும்ப வன்முறை விழிப்புணர்வு பதாகை கற்பிட்டிப் பிரதேசத்தில்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ் )

பாலாவியில் அமைந்துள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தால் குடும்ப வன்முறை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு பதாகை அமைக்கும் நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலகத்தில் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜுவைரியா முகைதீன் தலைமையில் இடம்பெற்றது.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் கடந்த 18 வருடங்களாக பெண்களுக்கு எதிராக இடம்பெறும் அநீதிகளுக்கு குரல் கொடுக்கும் நோக்கோடு பொலிஸ் முறைப்பாடு செய்தல், வீட்டு வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்தல், உளவளத் துணை ஆலோசனைகள் வழங்குதல், காதி நீதிமன்றத்தின் வழக்கு தாக்கல் செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்குதல், தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பு இல்லத்தில் வைத்து பராமரித்தல் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்ளுதல் போன்ற பல் வேறு வகையான சேவைகளை செய்து வருகின்றது.

எனினும் அரச கட்டமைப்பு ஊடாக பல்வேறு சேவைகளை பெறக்கூடிய வாய்ப்புக்கள் மக்களுக்கு இருந்தும் இவ்விடயம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு குறைவாக உள்ளது. இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு உரிய நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாமலும் குடும்ப வன்முறையால் தொடர்ந்தும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

அத்துடன் குடும்ப வன்முறை ஒன்று நடைபெற்றால் ஒரு முறைமையின் ஊடாக சட்ட ரீதியாக எவ்வாறு முறைப்பாடு செய்யப்பட வேண்டும் என்ற முறைமை ஊடாக செல்லும்போது உடனடியாகப் பாதிக்கப்பட்ட நபர் உரிய நீதியை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இதன் அடிப்படையில் இவ்வாறான விடயங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முகமாக முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தால் இவ் விழிப்புணர்வு பதாகை அமைக்கப்பட்டு வருகிறது என்று இந்த நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஆர். நிகாஸ் தெரிவித்தார்.





# மோட்டர் சைக்கிளில் பயணித்த போது ஆற்றில் தவறி விழுந்தவர் சடலமாக மீட்பு!

(பாறுக் ஷிஹான்)

மோட்டர் சைக்கிளில் ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசைக் கடக்க முற்பட்ட வேளையில் மோட்டர் சைக்கிள் கவிழ்ந்து தண்ணீரில் தவறி விழுந்து அடித்து செல்லபட்ட குடும்பஸ்தர் நீண்ட நேரத் தேடுதலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பளம் வயல் உள்ளாத்து கட்டு பகுதி அருகில் உள்ள ஆலயடிக்கட்டு பகுதியில் நேற்று திங்கட்கிழமை (13) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தண்ணீரில் தவறி விழுந்து நீரில் அடித்து செல்லப்பட்ட நபர் தனது மோட்டார் சைக்கிளில் மனைவி பிள்ளையுடன் குறித்த பகுதிக்கு வருகை தந்துள்ளார். பின்னர் தனியாக மோட்டார் சைக்கிளில் முன்செல்ல மனைவியுடன் பிள்ளையும் பின்னால் நடந்து ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசுடன் இணைந்த பாலத்தில் பயணம் செய்துள்ளனர். இதன் போது இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. 32 வயதுடைய அப்துல் லத்தீப் இக்ராம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் வெளிநாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில் சில நாள்களுக்கு முன் விடுமுறை நிமிர்த்தம் நாடு திரும்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் பொலிஸாரின் பிரசன்னத்துடன் கல்முனை ஆழ்கடல் சுழியோடி அணி, சாய்ந்தமருது ஜனாசா பேரவை அணி, நிந்தவூர் தன்னார்வ தொண்டர் அணி என்பன கடும் முயற்சி மேற்கொண்டதை அடுத்துச் சடலத்தை மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.



# வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் தைப்பொங்கல் விசேட பூசைகள்

சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் தைப்பொங்கல் விசேட பூசைகள் அதன் பிரதம குரு ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இடம் பெற்றது.



முன்னாதாக காலை 5 மணியளவில் விசேட யாக பூசைகள் இடம் பெற்று 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம் பெற்றன. தொடரந்து வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் உள்வீதி வலம் வந்து 8 மணியளவில் பொங்கல் இடம் பெற்றது. இதில் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அடியவர்கள் கலந்துகொண்டனர்.

# காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதி இருளில் மூழ்குவதால் மக்கள் சிரமம்!

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட அம்பாறை – மாவடிப்பள்ளி பிரதான வீதியில் அமைந்துள்ள மின்விளக்குகள் பல நாள்களாக ஒளிராமை காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

தற்போது அடை மழை அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் நிலையில் இப்பகுதியில் இவ்வாறு இருளில் மூழ்கு வதால் வீதியில் செல்லும் வாகனங்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டுள்ளனர்.



அம்பாறை – காரைதீவு – மாவடிப் பள்ளி பிரதான வீதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 6 மாணவர்கள் உட்பட எட்டு பேர் நீரில் மூழ்கி மரணமானதும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர இந்தப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் காணப் படுவதால் மாவடிப்பள்ளி பெரிய பாலம் முதல் காரைதீவு முச்சந்தி வரையில் பயணிகள் அவலங்களை எதிர் கொள்கின்றனர் என்று தெரிவிக்கின் றனர்.

ஆனால் பெரிய பாலம் தொடக்கம் மாவடிப்பள்ளி சியாரம் வரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒளிந்த பின் மீண்டும் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஒளிராமல் விடுவதால் பல சிரமங்களை ஏற்படுகின்றன.

மழை அதிகரிக்கும் போது வீதிக்கு மேல் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடு வதால் பாம்பு, முதலை, ஆமை போன் றவைகளின் அச்சுறுத்தலும் இங்கு ஏற்படுகின்றது.

எனவே இவ்வீதியின் மின்விளக் குகள் தொடர்ந்தும் ஒளிர்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# கணபதிபுரம் மாணவர்களுக்கு கற்றல் உதவிகள் வழங்கல்!

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் ( ஒஸ்கார்) சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மல்வத்தை, கணபதிபுரம், விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும், பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனத் தையும் வழங்கி வைத்தது.

ஒஸ்கார அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வேண்டுகோ ளுக்கு அமைவாக, ஒஸ்கார் அமைப்பின் போசகரும் உலகறிந்த பிரபல சமூக செயற்பாட்டாளருமான நாகமணி குணரெத்தினம் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி நல்கினார்.

இந்த நிகழ்வு , மல்வத்தை கணப திபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.கிருபைராஜா தலைமையில் நடைபெற்றது.

ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப் பாளரும் பிரபல ஊடகவியலாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜாவும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக இலங்கை வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளர் இ.தவராஜா கலந்து கொண்டார்.





# பொங்கி மகிழ்வோம் போற்றுவோம் இறையை !

மார்கழி மாதம் மனமுறை மாதம்
தேவர் விரும்பும் திருவுறை மாதம்
சைவம் வைணவம் போற்றிடும் மாதம்
மெய்யாம் இறையைத் துதித்திடும் மாதம்

இறையைத் துதித்து எல்லோர் மனமும்
புனிதம் ஆகியே நிற்பது தையிலே
தையிலே வருவதோ தலைநிமிர் பெருவிழா
அதுவே தமிழரின் ஆனந்தப் பெருவிழா

உழவை மதிக்கும் உன்னதப் பெருவிழா
உழைப்பை உவக்கும் உழைப்பவர் திருவிழா
நன்றியை நவிலும் நயப்புடைப் பெருவிழா
நல்லதை நல்கிடும் தைப்பொங்கல் நல்விழா

சமயமும் கலக்கும் சமத்துவம் இருக்கும்
தமிழர் யாவரும் பொங்கலைப் பொங்குவார்
பொங்கிய பொங்கலைப் பங்கிட்டு மகிழ்வார்
பொங்கல் என்பதே பூரிப்பைத் தந்திடும்

நீராடி யாவரும் புத்துடை அணிவார்
மாவிலை தோரணம் வாசலில் அமைப்பார்
கோலம் போடுவார் கும்பம் வைப்பார்
குத்து விளக்கை ஒளிர்ந்திடச் செய்வார்

அப்பா அம்மா தாத்தா பாட்டி
அனைவரும் மகிழ்வாய் அங்கே வருவார்
பொங்கற் பானையை அலங்காரம் செய்து
மங்கலம் பொங்கென அடுப்பினில் வைப்பார்

பாலினை யாவரும் பகிர்ந்துமே விடுவார்
பொங்கும் பாலைப் பொறுமையாய்ப் பார்ப்பார்
வெண்ணுரை தள்ளிடப் பாலுமே பொங்கும்
யாவரும் அரிசியைப் பானையில் இடுவார்

சர்க்கரை தேனைப் பொங்கலில் சேர்ப்பார்
சந்தோஷம் அங்கே நிறைந்துமே பொங்கும்
அத்தனை பேரும் பொங்கலைப் படைத்து
ஆதவன் நோக்கி அர்ப்பணம் செய்வர்

ஆலயம் நோக்கி அனைவரும் செல்வார்
ஆனந்தம் மகிழ்வு அமைந்திட வேண்டுவார்
எண்ணிய காரியம் ஏற்றமாய் அமைந்திட
இறையின் திருவடி வீழ்ந்தே வேண்டுவார்

உறவுகள் வருவார் உவகை கொள்ளுவார்
பெற்றும் கொடுத்தும் பெருமகிழ் வெய்துவார்
பெரியவர் ஆசியைப் பெற்றிட யாவரும்
அருகினில் சென்று ஆவலாய் நிற்பார்

ஆசிகள் பெற்றவர் அனைத்தையும் பெற்றதாய்
அக மகிழ்வுடனே ஆனந்தம் அடைவார்
பெருநாள் திருநாள் பெறுமதி என்பதை
உணரும் போது உள்ளம் உவக்கும்

பொங்கற் பண்டிகை பூரிப்பை ஊட்டும்
எங்கும் பட்டாசு மத்தாப்பும் இருக்கும்
பாடலும் இருக்கும் பட்டிமன்றமும் இருக்கும்
யாவரும் மகிழும் கோலமும் பெருகும்

இல்லார் இருப்பார் யாவரும் பொங்குவார்
இல்லம் அனைத்தும் பொங்கல் இருக்கும்
பொங்கல் என்பது மங்கலம் ஆகும்
பொங்கி மகிழ்வோம் போற்றுவோம் இறையை!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**







# அடங்காத காளைகளை அடக்கும் காளையர்: அனல் பறக்கும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு!

மதுரை அவனியாபுரத்தில் நடந்து வரும் ஜல்லிக்கட்டுப் போட்டியில் இதுவரை 7 சுற்றுகள் நிறைவடைந்துள் என. வாடிவாசலில் இருந்து இதுவரை அவிழ்க்கப்பட்ட 86 காளைகளில், 23 காளைகளை மாடுபிடி வீரர்கள் அடக் கினர். இந்த ஜல்லிக்கட்டுப் போட்டி யில் 28 பேர் காயமடைந்துள்ள னர்.



பொங்கல் பண்டிகையை முன் னிட்டு மதுரை மாவட்டம் அவனியா புரம், பாலமேடு மற்றும் அலங்கா நல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப்புகழ் பெற்றவை. இந்த ஆண்டு பொங்கலை ஒட்டி முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி மதுரை அவனியாபுரத்தில் காலை 6.30 மணிக்கு தொடங்கியது. இந்தப் போட் டியை தமிழக பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கிவைத்தார்.

முதலில் கோயில் மாடுகள் அவிழ்க் கப்பட்டன. பின்னர் அவிழ்க்கப்பட்டு வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் உற் சாகத்துடன் அடக்கினர். இந்த வீர விளையாட்டுப் போட்டியை காண மதுரை மட்டுமின்றி, வெளிமாநிலங் கள், வெளிநாடுகளில் இருந்தும் ஏரா ளமானோர் கண்டு ரசித்து வருகின் றனர். காளைகளை அடக்கும் மாடு பிடி வீரர்கள் ஆரஞ்சு, நீலம் உள்ளிட்ட வண்ணங்களில் உடையணிந்து ஒவ் வொரு சுற்றிலும் தலா 50 வீரர்கள் என்ற கணக்கில் களமாடி வரு கின்றனர்.

விறுவிறுப்பாக நடைபெற்று வரும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட் டியில் மாலை 4 மணிவரை 7 சுற்று கள் முடிவடைந்துள்ளன.

இதுவரை களம் கண்ட 86 காளை களில் 23 காளைகளை மாடுபிடி வீரர்கள் பிடித்துள்ளனர். முன்னதாக, பகல் 1 மணி வரை கால்நடைத்துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவர்களால் 512 காளைகள் பரிசோதிக்கப்பட் டுள்ளன. இதில் 484 காளைகள் போட் டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்பட் டுள்ளன.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் இதுவரை மாடுகள் முட் டியதில் 13 மாடுபிடி வீரர்கள், மாட்டின் உரிமையாளர்கள் 12 பேர் மற்றும் பார்வையாளர்கள் மூவர் உட்பட மொத்தம் 28 பேர் காயம் அடைந்துள்ள னர். படுகாயம் அடைந்த 5 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

இதனிடையே, காளைகள் மற்றும் வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடைபெறும் இடத்தில், நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் நுழைந் ததால் சலசலப்பு ஏற்பட்டது.

இதனால், வீரர்கள், காளை உரி மையாளர்கள் மற்றும் பொலிஸா ருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத் தால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதை யடுத்து பொலிஸார் லேசான தடியடி நடத்தி அங்கிருந்தவர்களை கலைந்து போகச் செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# வீரத்தைப் பறைசாற்றும் பெருவிழா; தமிழக முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

உலகத் தமிழர் அனைவருக்கும் எனது அன்பான தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட் டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில்.

“முத்தமிழ், முச்சங்கம், முக்கனி, மூவேந்தர் முக்கொடி கொண்ட தமிழரின் தனிப்பெரும் பண்பாட்டு விழாவான பொங்கல் திருநாள் மூன்று நாள்களுக்குக் கொண் டாடப்படுகிறது.

நானிலம் போற்றும் இந்த நன் நாளினை எழுச்சியோடு இந்தப் புத்தாண்டில் கொண்டாட எதிர்நோக்கியுள்ள உலகத் தமிழர் அனைவருக்கும் எனது அன்பான தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள். பொங்கல் விழா என்பது உழவை, உழைப்பை, சமத்துவத்தை, இயற்கையின் சிறப்பைப் போற்றும் விழா.

தமிழரின் பண்பாட்டை, நாகரிகத்தை, வீரத்தைப் பறைசாற்றும் பெருவிழா! விளைச்சலின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் விழா.

உற்றார், உறவினர், சுற்றம், நட்பு, ஊரார் உடன் கொண்டாடிக் களித்திடும் விழா.




பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வனர், வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி அவர்தம் ஆற்றலையும் அறிவிளையும் பெருக்கிட நாள் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வளர மூன்றாண்டுகளில் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்துள்ளது தமிழ்நாடு! பத்தாண்டு காலமாக உறங்கியிருந்த தமிழ்நாடு, இன்றைக்கு வீறநடை போட்டு, அனைத்துத் துறைகளிலும் உயர்ந்து நிற்கிறது.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ரஷ்யா மீது உக்ரைன் ஏவுகணை தாக்குதல்

உக்ரைன் நடத்திய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் இரண்டு ரஷ்ய நகரங்களில் உள்ள இரண்டு தொழிற்சாலைகள் சேதமாகியுள்ளன.

இந்த தாக்குதல்கள் காரணமாக அப்பகுதியில் உள்ள பாடசாலைகளை உடனடியாக மூடுவதற்கு ரஷ்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை உக்ரைன் ஏவிய 5 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 200 ஆளில்லா விமானங்களை அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.



# தங்கச் சுரங்கத்திலிருந்து பல சடலங்கள் மீட்பு

தென்னாப்பிரிக்காவில் கைவிடப்பட்ட தங்கச் சுரங்கமொன்றிலிருந்து சட்டவிரோத சுரங்கத்தொழிலாளர்களும் பல சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சுரங்கத்தின் நூற்றுக்கணக் கானவர்கள் சிக்கியிருக்கலாம் என்றும் குறைந்தது 100 பேர் ஏற்கனவே இறந்திருக்க லாம்எனவும்சந்தேகம்வெளியிடப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவில்பயன்படுத்தப்படாத தங்கச் சுரங்கத்தில் உள்ள மோசமான நிலைமையைக் காட்டும் காணொளிகள் அண்மையில் வெளியாகியிருந்தன.

அதில் ஏராளமான சட்டவிரோத சுரங்கத் தொழிலாளர்கள் பல மாதங்களாக நிலத்தடி யில் வசித்து வருகின்றனர் என குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்தநிலையில், நீதிமன்றத்தின் உத்தர வுக்கமைய, நேற்று முன்தினம் முதல், சட்ட விரோத தங்கச் சுரங்கத்தில் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், ஜோகன்னஸ்பர்க்கிலி ருந்து தென்மேற்கே 145 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சட்டவிரோத சுரங்க மொன்றில் 100 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத சுரங்கத் தொழிலாளர்கள் நிலத்தடியில் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது.





பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 14/01/2025

## கனடாவில் வாகனங்களுக்கு தீ மூட்டிய மர்ம நபர்கள்

கனடாவின் மார்க்கம் பகுதியில் சில வாகனங்களுக்கு தீ மூட்டிய சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இரண்டு சந்தேக நபர்கள் இவ்வாறு வாகனங்க 02



# கனடாவில் வீடுகளுக்கான வாடகை தொகையில் சரிவு

**கனடாவில் வீட்டு வாடகை தொகையில் சரிவு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் நாடு தழுவிய அடிப்படையில் வீட்டு வாடகை தொகைகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.**

**ஒப்பீட்டு அளவில் ஓராண்டு கால இடைவெளியில் வாடகை தொகைகள் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 17 மாதங்களில் பதிவான குறைந்த வாடகை தொகை கடந்த டிசம்பர் மாதம் பதிவாகியுள்ளது.

சராசரி வாடகை தொகை 2109 டொலர்கள் என பதிவாகியுள்ளது. ரெண்டல்ஸ்டொட்.சீ.ஏ என்ற இணையத்தளம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதிலும் வீட்டு வாடகைத் தொகையானது 3.2 விதத்தினால் சராசரியாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

# கனடாவின் அரசியலில் எலோன் மஸ்க் தலையீடு

கனடாவின் அரசியல் உள்விகாரங்களில் உலகின் செல்வந்தர்களில் ஒருவரான எலோன் மஸ்க் தலையீடு செய்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

உலகின் செல்வந்தரும் எக்ஸ் தளம், டெஸ்லா வாகன நிறுவனத்தின் உரிமையாளருமான எலோன் மஸ்க், கனடிய அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அடிக்கடி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

மஸ்க் கான்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியே பொலியேவை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை கடுமையாக சாடியுள்ளார்.

கடந்த ஒரு வார கால பகுதியில் சமூக ஊடகங்களின் வாயிலாக கனடிய அரசியல் விவகாரங்கள் தொடர்பில் பல்வேறு கருத்து பதிவுகளை அவர் வெளியிட்டுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரை புகழ்ந்து அவர் பதிவுகளை இட்டுள்ளார் என்பதை குறிப்பிடத்தக்கது.



அதேவேளை, கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவி விலகலை அவர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

மஸ்கின் தாயாரான மே மஸ்க் கனடாவின் சஸ்கட்ச்வானில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கியூபக் மாகாணத்தில் தட்டம்மை பரவுகிறது



கனடாவின் கியூபக் மாகாணத்தில் தட்டம்மை நோய் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாகாண சுகாதார அலுவலகம் இது தொடர்பான அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் எனவும் இதுவரையில் இந்த ஆண்டில் 11 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர் எனவும் தெரியப்படுகிறது.

கியூபெக் மாகாணத்தின் நொவெல், மொன்றியால் மற்றும் மொன்றிஜி போன்ற பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் தட்டமை நோயாளர்கள் பதிவாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நோய் பரவுகை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நோய்த் தொற்றிற்கு பலர் இலக்காகி இருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரே அறையில் நோய் தொற்று உள்ளவர்களுடன் இருப்பதன் மூலம் இந்த நோய் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நோய் தொற்று பரவுகை தொடர்பில் கியூபெக் மாகாண இணையத் தளத்தில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நோய் தொற்று பரவி இருக்கலாம் என சந்தேகப்படுபவர்கள் தனித்திருப்பதன் மூலம் நோய்ப் பரவுகையை வரையறுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சளி, இருமல். சிவந்த கண்கள் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் அவர்கள் சற்று அவதானமாக இருக்க வேண்டும் என வுறுத்தக் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துகளை பயன்படுத்துவதனை தவிர்க்குமாறும் முக கவசம் அணிவதும் பொருத்தமானது எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

# ரஷ்யாவிற்கு ஆயுத பாகங்களை கடத்திய கனடியருக்கு தண்டனை



அமெரிக்காவில் இருந்து ரஷ்யாவிற்கு ஆயுதங்களின் பாகங்களை கடத்திய கனடிய பிரஜை ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மொன்றியால் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய நீதிமன்றம் குறித்த நபருக்கு 40 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

38 வயதான நிகலோய் கோல்ஸ்டேவ் என்ற நபருக்கு இவ்வாறு நீதிமன்றம் தண்டனை வகித்துள்ளது.

அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து மேற்படி நபர் பொருள்களை கொள்வனவு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளின் அடிப்படையில் அந்நாட்டுக்கு விற்பனை செய்யப்பட முடியாத பொருள்களை இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இலத்திரனியல் சாதனங்களை ரஷ்யாவிற்கு அனுப்வி வைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரின் போது இந்த சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்படி நபருக்கு நீதிமன்றம் 40 மாதங்கள் சிறை தண்டனை விதித்துள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு தீ மூட்டியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட அடிப்படையில் வேண்டுமென்றே இவ்வாறு வாகனங்களுக்கு தீ மூட்டப்பட்டுள்ளனர் என யோக் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதிகாலை வேளையில் இவ்வாறு வாகனங்கள் மீது எரிபொருள்களை ஊற்றி தீ மூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# கனடாவில் பனி படர்ந்த நீரில் மூழ்கி ஒருவர் பலி

கனடாவில் பனி படர்ந்த நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். கனடாவின் ரொன்ரோ பகுதியில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப் படுகிறது. டொரன்டோ பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டொரன்டோ தீவு பகுதியில் அமைந்துள்ள ஒன்றாரியோ நதியில் படர்ந்திருந்த பனிப் படலத்தில் அந்த நபர் நடந்து சென்ற போது பனி படலம் இடிந்து விழுந்து நீரில் மூழ்கியுள்ளார்.

நீரில் மூழ்கியவரின் சடலம் லகூன் வீதிக்கு அருகாமையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிகமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

பனி படர்ந்த நீர் நிலைகளுக்கு மேல் நடப்பது அபாயகரமானது என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.



# கனடாவிலிருந்து மகனை இந்தியாவிற்கு கடத்திய தந்தையை தேடும் பொலிஸ்

கனடாவில் மூன்று வயது சிறுவனை இந்தியாவிற்கு கடத்தியுள்ளார் என அவரது தந்தை மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

48 வயதான கப்பில் சுனக் என்ற நபரை தேடி வருவதாக கனடிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூன்று வயதான சிறுவனை மேற்படி நபர் இந்தியா விற்கு அழைத்துச் சென்று மீண்டும் கனடா திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தந்தையும் மகனும் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவின் டில்லிக்கு சென்றுள்ளனர்.

இருவரும் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நாடு திரும்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த உத்தரவிற்கு அமைய மேற்படி இருவரும் நாடு திரும்பி இருக்க வில்லை என தெரிவிக் கப்படுகிறது. கனடாவிற்கு நாடு திரும்பாத காரணத்தினால் அந்த நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த இருவரையும் தேடி கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.



இந்த சம்பவம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் ஏற்கனவே தகவல் வெளியிட்டுள்ளனர்.

கணவன் மனைவி பிரிந்து வாழும் நிலையில் பிள்ளைகள் தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பிற்கு அடிபணியாது பிள்ளைகளை அழைத்துச் செல்லல் கனடாவில் கடத்த லாகவே கருதப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.